**செய்தி வெளியீடு எண்: 80** **நாள் : 24.01.2011**

# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறையின் காவல் துறை தலைவர் **திரு.தா.பூ.சுந்தரமூர்த்தி, இ.கா.ப.,** அவர்களின் உத்தரவின் பேரில் அண்டை மாநிலங்களான ஆந்திரா மற்றும் கர்நாடகாவிற்கு ரேசன் அரிசி கடத்தப்படுவதை தடுக்கும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளும் விதமாக சென்னை மண்டல காவல் கண்காணிப்பாளர் **திரு.ஜி.ராமர்** அவர்களின் நேரடி மேற்பார்வையில் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையினரால் தீவிர வாகன சோதனை நடத்தப்பட்டதில் **திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி** ஆகிய இடங்களில் நேற்று 23.01.2011ஆம் தேதி நடத்தப்பட்ட வாகன தணிக்கையில் பொது விநியோகத் திட்ட ரேசன் அரிசி கடத்தி வந்த நான்கு லாரிகள் பறிமுதல் செய்யப்பட்டு அதிலிருந்த **422.5 குவிண்டால் பொது விநியோகத் திட்ட ரேசன் அரிசி** கைப்பற்றப்பட்டது. வழக்கில் சம்மந்தப்பட்ட முக்கிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டும் வழக்கு பதிவு செய்யப்பட்டும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மேலும் இது சம்மந்தமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அண்டை மாநிலங்களுக்கு ரேசன் அரிசி கடத்தப்படுவதை தடுக்கும் முகமாக தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் தொடர்ந்து வாகன தணிக்கைகள் நடத்தியும் பொது விநியோகத் திட்ட அரிசி கடத்தப்படுவது பெருமளவில் தடுக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும்.

*கு.பொ.வ. கு.பு. துறை.*
*தொலைபேசி எண்: 2433 8973, 2433 8974.*

**வெளியீடு: —**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ—9.**